

தென்காசி முதல்வர் வருகை தர இருக்கிற வேல்ஸ் ஸ்கூல் களத்தில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரனுக்கு திருமண நாளான நேற்று திமுக தென்காசி தெற்கு மாவட்டம் செயலாளர் பொ.சிவபத்மநாதன் வாழ்த்து தெரிவித்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஷேக் தாவூது, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை, தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் திவான்ஒலி, ஆலங்குளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் அன்பழகன், செங்கோட்டை நகரச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன், தென்காசி நகர துணைத்தலைவர் கே.என்.எல். சுப்பையா, அரசு வழக்கறிஞர் வேல்சாமி உள்ளனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் சிவபத்மநாதன் தலைமையில் அம்பேத்கர் நினைவு நாள் அனுசரிப்பு



**தென்காசி டிச.07-**

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. தலைமை கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பொ. சிவபத்மநாதன் தலைமையில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 66வது நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சிவ.பத்மநாதன் மலர்தூவி மரியாதை செய்தார். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஷேக் தாவூது, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்; சாமித்துரை, தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் திவான்ஒலி, ஆலங்குளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் அன்பழகன், செங்கோட்டை நகரச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன், தென்காசி நகர துணைத்தலைவர் கே.என்.எல். சுப்பையா, அரசு வழக்கறிஞர் வேல்சாமி, தென்காசி முன்னாள் நகர மன்றத்தலைவர் கோமதிநாயகம், முன்னாள் அரசு வழக்கறிஞர் செந்தூர் பாண்டியன், மாவட்ட அலுவலக மேலாளர் ராம்ராஜன், வழக்கறிஞர் வி.ராஜா, வழக்கறிஞர்கள், கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்

# அம்பேத்கர் நினைவு தினம்: குட்டியப்பா எம்எல்ஏ மரியாதை



**கடையநல்லூர் டிச.07**

சட்டமாமேதை பாரத ரத்னா அண்ணல் அம்பேத்கர் 65வது நினைவுதினத்தை முன்னிட்டு, கடையநல்லூர் எம்எல்ஏ அலுவலகத்தில் தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான ராஜா கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா எம்எல்ஏ அலங்கரித்து வைக்கப்பட்ட அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

**பலர் பங்கேற்பு**

தென்காசி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பொய்கை சோ மாரியப்பன் , கடையநல்லூர் நகர கழக செயலாளர் எம். கே.முருகன், முன்னாள் நகர கழகச் செயலாளர் கிட்டு ராஜா, சவுதி அரேபியா அம்மா பேரவை செயலாளர் எஸ்.எம்.மைதீன், மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் கருப்பையா தாஸ், நகர இளைஞரணி செயலாளர் ராஜேந்திர பிரசாத்,மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் புகழேந்தி, நகர இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறைசெயலாளர் பால்பாண்டி நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் கண்ணன், நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் மாரியப்பன், தியாகராஜன் அரவிந்த் மற்றும் வார்டு செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருக்குறளை ஒப்புவிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பரிசு: கலெக்டர் செந்தில்ராஜ் தகவல்

**தூத்துக்குடி.டிச.07.**

தூத்துக்குடி மாவட்டத்தில் 1330 திருக்குறளை ஒப்புவிக்கும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.10ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையில் ஆண்டுதோறும் 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு ரூ.10ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். இந்தப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் திறனறிக் குழு உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு பரிசுக்குப் பரிந்துரை செய்யப்படுவர். மாணவர்கள் 1330 குறள்களையும் ஒப்புவிக்கும் திறன் பெற்றவர்களாக இருப்பதோடு குறளின் பொருளையும் அறிந்திருந்தால் கூடுதல் தகுதியாகக் கருதப்படும். ஏற்கனவே பரிசு பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கக் கூடாது. விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது தமிழ்வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.tn.gov.in வலைதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பப் படிவத்தினை நிறைவு செய்து, தாங்கள் பயிலும் பள்ளி / கல்லூரியிலிருந்து உரிய அனுமதிச் சான்றிதழ் பெற்று, 3 புகைப் படங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 20.12.2022க்குள் அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் திருக்கார்த்திகை திருநாளை முன்னிட்டு சொக்கப்பனை கொளுத்தப்பட்டது



**திருச்செந்தூர், டிச.7-**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் திருக்கார்த்திகை திருநாளை முன்னிட்டு நேற்று இரவு கடற்கரையில் சொக்கப்பனை கொளுத்தப்பட்டது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று திருககார்த்திகை திருநாளை முன்னிட்டு கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 5.30 மணிக்கு விஸ்வரூபம், 6மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடந்தது. திருக்கார்த்திகையை முன்னிட்டு சுவாமி ஜெயந்திநாதருக்கு 108 மகா தேவர் சன்னதி முன்பு சிறப்பு அபிஷேகம், அலங்காரமாகி தீபாராதனை நடந்தது. மூலவருக்கு உச்சிகால அபிஷேகமும் தீபாராதனையும் நடந்தது. மாலையில் கோவில் உள்பிரகாரத்தில் 108 விளக்கு பூஜை நடந்தது. பின்னர் மகா மண்டபத்தில் உள்ள விநாயகர், மூலவர் உள்ளிட்ட அனைத்து சுவாமி சன்னதிகளிலும் நாரணி தீபம் ஏற்றப்பட்டது..தொடர்ந்து, சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி-தெய்வானையுடன் தங்கசப்பரத்தில் சண்முகவிலாசத்தில் எழுந்தருளினார். இரவு - கடற்கரையில் சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. தொடர்ந்து சுவாமி ஜெயந்திநாதருக்கு சிறப்பு தீபாராதனையாகி, வள்ளி-தெய்வானையுடன் தங்க ரதத்தில் எழுந்தருளி கிரி வீதியில் பவனி வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுத்தார். திருக்கார்த்திகையை முன்னிட்டு திரளான பக்தர்கள் கலந்து சாமி தரிசனம் செய்தனர்.

# மேலப்பாளையத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சி ஆர்ப்பாட்டம்




**திருநெல்வேலி டிச.7**

பாபரி மஸ்ஜித் இடிப்பு தினமான டிச.06 அன்று பாசிச எதிர்ப்பு தினம் என்ற பெயரில் தமிழகம் உள்பட நாடு முழுவதும் எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.நெல்லை மேலப்பாளையத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாவட்ட மாவட்ட பொதுச் செயலாளர் பர்கிட் அலாவுதீன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட து. தலைவர் ஹயாத் முஹம்மது வரவேற்புரை ஆற்றினார், மாவட்ட தலைவர் சாகுல் ஹமீது உஸ்மானி துவக்கவுரை நிகழ்த்தினார், கட்சியின் மாவட்ட பொருளாளர் முகமது காசிம்,மாவட்ட பொதுச் செயலாளர் இத்ரீஸ் பாதுஷா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் மின்னுதுல்லா, எஸ் எஸ் ஏ கனி, எஸ்.டி.டி.யூ தொழிற்சங்க மாநகர் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஆரிப் பாட்ஷா,விம்.மாவட்ட தலைவர் மஹ்மூதா ரினோஷா, வர்த்தகர் அணியின் மாவட்ட தலைவர் சிட்டி சேக், எஸ். டி டி யூ தொழிற்சங்க நெல்லை மண்டல தலைவர் ஹைதர் அலி,கட்சியின் பொறியாளர் அணி மாநில பொருளாளர் சேக் முகமது இலியாஸ், மருத்துவ சேவை அணி மாவட்ட தலைவர் ரஹ்மத்துல்லா, சுற்றுசூழல் பாதுகாப்பு அணி மாவட்ட தலைவர் பக்கீர் முகமது லெப்பை, சமூக ஊடக அணி மாவட்ட தலைவர் முஹம்மது கௌஸ் ,நெல்லை தொகுதி தலைவர் முகமது அசனார், பாளை தொகுதி செயலாளர் சனா சிந்தா,ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட எஸ்டிபிஐ வர்த்தக அணி மாநில தலைவர் தமீமுள் அன்சாரி,திராவிட தமிழர் கட்சியினுடைய மாநில பொதுச் செயலாளர் கதிரவன், பல்சமய உரையாடல் பணிக்குழு பாளையங்கோட்டை மறை மாவட்ட செயலாளர் அருள் மை.பா.ஜேசுராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு பாளை தொகுதி தலைவர் மின்னதுல்லா நன்றி கூறினார்.



**இந்திய நாடார் பேரமைப்பின் நிறுவனத் தலைவர் ராகம் சவுந்தரபாண்டியன் நாடாரை தெக்ஷணமாற நாடார் சங்கத்தின் தலைவர் ஆர் கே காளிதாசனை சந்தித்தார் இந்த சந்திப்பில் இந்திய நாடார்கள் பேரமைப்பின் தென் மண்டல மாநாடு குறித்து ஆலோசிக்கப்பட்டது இதில் மாநிலத் துணைத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தென்காசி மத்திய மாவட்ட தலைவர் ஆனந்த் காசிராஜன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்**



**குற்றாலம் யோகா யுவகேந்திரா சார்பில் யோகா மாஸ்டர் சிவா திருண்ணாமலையில் அண்ணாமலை அடியார்களுக்கு அனகத்திலிருந்து அன்னதானம், வஸ்திரதானம், போர்வை வழங்கினார்.**

<u>தென்காசி மாவட்டத்திற்கு முதல்வர் வருகை</u>

# பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல்துறை உயர் அலுவலர்களுடன் தென்மண்டல ஐ.ஜி.அஸ்ராகார்க் ஆய்வு



**தென்காசி,டிச.07-**

தென்காசி மாவட்டத்திற்கு தமிழக முதல்வர் அவர்களின் வருகையை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்களுடன் தென்மண்டல காவல்துறை தலைவர் ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டத்திற்கு தமிழக முதல்வர் அவர்களின் வருகையை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் இடம் போன்றவை குறித்து தென்மண்டல காவல்துறை தலைவர் அஸ்ராகார்க் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் உயர் அதிகாரிகள் மற்றும் தனிப்படை காவல் துறையினருடன் நடந்த ஆய்வுக் கூட்டத்தில், கொலை சம்பவங்களை தடுக்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், புலன் விசாரணையில் உள்ள வழக்குகள் குறித்தும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் நபர்கள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்தும், போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது குறித்தும் காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் பிரவேஸ் குமார் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ் உடனிருந்தனர்..

# தி.மு.க செயற்குழு கூட்டம் வரும் 9ம் தேதி தூத்துக்குடியில் நடக்கிறது: அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை

**தூத்துக்குடி.டிச.07-**

தூத்துக்குடியில் வருகிற 9ம் தேதி (வெள்ளிக்கிழமை) தி.மு.க செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வருகிற 9ம் தேதி (வெள்ளிக் கிழமை), மாலை 5 மணிக்கு கலைஞர் அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ் தலைமையில், மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் சமூகநலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் (ம) வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் கீதாஜீவன் சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் இனமானப் பேராசிரியரின் நூற்றாண்டு நிறைவு விழா குறித்து, பூத் கமிட்டி அமைப்பது குறித்து, கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தப்படுகிறது கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன். இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கீதாஜீவன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**கோவில்பட்டியில் அம்பேத்கார் சிலைக்கு அதிமுக சார்பில் கடம்பூர்ராஜூ எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.**

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தென்காசி வருகை: பாவூர்சத்திரத்தில் ஆட்டோ பிரசாரம் தொடக்கம்



**செங்கோட்டை டிச.6:**

நாளை தென்காசிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகையையொட்டி பாவூர் சத்திரத்தில் ஆட்டோ பிரசாரத்தை திமுக மாவட்ட செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் தொடங்கி வைத்தார்.

தென்காசி மாவட்டத்திற்கு நாளை (வியாழன்) முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை தந்து ஒரு லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மேலும் முடிவுற்ற திட்டங்களையும் தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசுகிறார்.தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு முதன் முறையாக தென்காசி வரும் முதல்வரை வரவேற்க தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் தலைமையில் சிறப்பான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் முதல்வர் வருகை குறித்த ஆட்டோ பிரசாரம் பாவூர்சத்திரத்தில் தொடங்கியது. பேருந்து நிலையம் அருகில் தொடங்கிய பிரசாரத்திற்கு கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சீனித்துரை தலைமை வகித்தார். தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று, ஆட்டோ பிரசாரத்தை தொடங்கி வைத்தார். மேலும் பேருந்து நிலையத்தில் பயணிகள், பொதுமக்களிடம் முதல்வர் வருகை குறித்த துண்டு பிரசுரங்களையும் அவர் வழங்கினார்.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட கவுன்சிலர் பேராசிரியர் இரா.சாக்ரடீஸ், கீழப்பாவூர் பேரூராட்சி தலைவர் பி.எம்.எஸ்.ராஜன், கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், பொதுக்குழு உறுப்பினர் ஏ.பி.அருள், அரசு ஒப்பந்ததாரர் சண்முகவேல், மாவட்ட பிரதிநிதி சமுத்திரபாண்டி, நிர்வாகிகள் செல்வராஜ்,மதிச்செல்வன், கபில், செல்வன், ராமர், முத்துபாண்டி, டேனியல்,குருசிங், ஆனந்த்,கீழப்பாவூர் பேரூர் பொருளாளர் தெய்வேந்திரன்,துணை செயலாளர் அறிவழகன், கவுன்சிலர் இசக்கி முத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# படைவீரர் கொடிநாள் விழா: இன்று நடக்கிறது

**தென்காசி டிச.07**

படைவீரர் கொடிநாள் விழா தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்களில் வைத்து இன்று மாலை 4 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகாஷ் தலைமையில் நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் மோடி தலைமையில் ஜி 20 மாநாட்டு அனைத்து கட்சி கூட்டத்தில்

# எடப்பாடியார் பங்கேற்று அ.தி.மு.க.வுக்கு வரலாற்று சிறப்பை பெற்று தந்துள்ளார்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பெருமிதம்




**திருமங்கலம்.டிச.07.**

பாரதப் பிரதமர் தலைமையில் டெல்லியில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டிற்கான அனைத்து கட்சி கூட்டத்தில் எடப்பாடியார் பங்கேற்று அ.தி.மு.க.வுக்கும், 1.5 கோடி தொண்டர்களுக்கும் வரலாற்று சிறப்பை பெற்று தந்துள்ளார் என டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் நடைபெற்ற மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

எடப்பாடியார் ஆணைகிணங்கமதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் தி.மு.க அரசைக் கண்டித்து வருகின்ற 9-ம் தேதி பேரூராட்சி பகுதியிலும் 13-ம் தேதி நகராட்சிகள் பகுதிகளிலும் 14-ம் தேதி ஒன்றியங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறது.இது தொடர்பாக மதுரை புறநகர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் டி.குன்னத்தூரில் உள்ள அம்மா கோவிலில் நேற்று சிறப்பாக நடைபெற்றது . இந்த கூட்டத்தில் பாரதப் பிரதமர் தலைமையில் ஜி-20 மாநாட்டிற்கான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அதிமுக சார்பில் பங்கேற்ற எடப்பாடியாருக்கு பாராட்டு தெரிவித்தும், திமுக அரசை கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் மக்களை பங்கேற்க செய்ய வேண்டும் என்றும், வருகின்ற பிப்ரவரி 23-ம் தேதி அம்மா கோவிலில் நடைபெறும் 51 திருமணத்திற்கான முகூர்த்தக்கால் நடும் பணி வருகின்ற 11-ம் தேதி நடைபெறுகிறது. இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதனை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது,

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் ஜி 20 மாநாட்டில் ஒவ்வொரு உலக தலைவர்கள் தலைமை பொறுப்பேற்று நடத்துவார்கள். அதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிற்கான ஜி-20 மாநாட்டிற்கு இந்தியா தலைமை பொறுப்பை ஏற்றுள்ளது. இது நமக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும். இந்த மாநாட்டிற்கான அனைத்துகட்சிகளின்ஆலோசனைக் கூட்டம், பிரதமர் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்க அனைத்து கட்சிகளுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்தது. அதனை தொடர்ந்து அ.தி.மு.க. சார்பில் எடப்பாடியாருக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் மாநாட்டில் பங்கேற்று நமது இயக்கத்திற்கு மாபெரும் வரலாற்று பெருமையை தேடித் தந்துள்ளார்.இதன் மூலம் இந்த இயக்கத்திற்கும், ஒன்னரை கோடி தொண்டர்களுக்கும் மிகப்பெரிய கௌரவத்தை எடப்பாடியார் பெற்றுத் தந்துள்ளார்.

எடப்பாடியாரின் வெற்றிகள் தொடர எம்.ஜி.ஆர்., அம்மா ஆகியோரின் அருளாசியும், தொண்டர்கள் ஆதரவும், மக்கள் பேராதரவும் அவரின் கரத்தை மென் மேலும் பலப்படுத்தும். இதன் மூலம் கழகத்திற்கு மாபெரும் வலிமையை அவர் உருவாக்கித் தந்துள்ளார். அவருக்கு கூட்டத்தின் வாயிலாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எடப்பாடியார் ஆணைக்கிணங்க திமுக அரசின் சொத்து வரி உயர்வு மின் கட்டண உயர்வு ,பால் விலை உயர்வு, விலைவாசி உயர்வு ஆகியவற்றை கண்டித்தும், இதனை மீண்டும் திரும்ப பெற வலியுறுத்தியும் வரும் 9-ம் தேதி மதுரை புறநகர் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சி பகுதிகளிலும், 13-ம் தேதிஅனைத்து நகராட்சி பகுதிகளிலும், 14-ம் தேதி அனைத்து ஒன்றிய பகுதிகளும் நடைபெறும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டங்களில் பொது மக்களும் பெரும் திரளாக பங்கேற்க செய்திட வேண்டும். மேலும் அம்மா பேரவையின் சார்பில் பிப்ரவரி 23-ம் தேதி 51 ஏழைஇஎளிய மணமக்களுக்கு தனது பொற்கரங்களால் எடப்பாடியார் திருமணத்தை நடத்தி வைக்கிறார். அதற்காக வரும் 11-ம் தேதி இதற்கான முகூர்த்தக்கால் அமைக்கும் பணி டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் கட்சியின் மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்களும், தலைமைக் கழக நிர்வாகிகளும், மாவட்ட கழகச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கிறார்கள். கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது கூட ஐந்தாண்டில் தான் அதிருப்தி வந்தது. ஆனால் தற்போது ஒன்றரை ஆண்டிலே மக்களின் ஒட்டு மொத்த வெறுப்பை சம்பாதித்த ஒரே அரசு இந்தியாவிலே ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு தான். இவ்வாறு அவர் பேசினார்.

இக் கூட்டத்தில் அம்மா சாரிட்டபிள் டிரஸ்ட் செயலர் பிரியதர்ஷினி, மாவட்ட துணைச் செயலாளர் வக்கீல் தமிழ்ச்செல்வம்,பொருளாளர் வக்கீல்திருப்பதி, முன்னாள் எம்.எல்.ஏ. நீதிபதி, மாநில சார்புஅணி நிர்வாகிகள் ராமகிருஷ்ணன், தனராஜன், வெற்றிவேல், சிவசுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் திருமங்கலம் வக்கீல். அன்பழகன், உலகாணி எம். கே.மகாலிங்கம், ராமசாமி, பிச்சைராஜன், ராஜா, ரவிச்சந்திரன், திருமங்கலம் நகர் கழகச் செயலாளர் ஜே.டி.விஜயன், உசிலை பூமாராஜா, திருமங்கலம் யூனியன் சேர்மன் லதாஜெகன், சார்புஅணி மாவட்டச் செயலாளர்கள் தமிழழகன், ராமகிருஷ்ணன், சிங்கராஜ் பாண்டியன், லெட்சுமி, சதீஸ்சண்முகம், ஜஹாங்கீர், மகேந்திர பாண்டி, பால்பாண்டி, பாஸ்கரன், பொதுக் குழு உறுப்பினர் சுமதி சாமிநாதன், ஒன்றிய பொருளாளர் உரப்பனூர் சாமிநாதன், கட்சி நிர்வாகிகள் ஆலம்பட்டி ஜெகன், ஆண்டிச்சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் மின்னல் கொடி ஆண்டிச்சாமி, உச்சப்பட்டி செல்வம், ஆதி(எ) ராஜா, மு.சி.சோ. சி.முருகன் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில்

# திருக்கார்த்திகை தீப விழா

**நத்தம், டிச,7**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவிலில் திருக்கார்த்திகையை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. பின்னர் பெண்கள் கோவிலின் உள்,வெளி பிரகாரங்களில் விளக்கு தீபங்களை ஏற்றி வழிபட்டனர்.

இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.இதைப்போலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில், நத்தம் காளியம்மன், பகவதி அம்மன், ராக்காச்சிஅம்மன், தில்லை காளியம்மன், விநாயகர் கோவில்களில் பக்தர்கள் கலந்து கொண்டு கார்த்திகை விளக்கு தீபங்களை ஏற்றி சாமி தரிசனம் செய்தனர்.

மேலும் திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் திருக்கார்த்திகையை முன்னிட்டு முருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடந்தது. இங்கும் சுற்று வட்டார பக்தர்கள் கலந்து கொண்டு தீபங்களை ஏற்றி தரிசனம் செய்தனர்.



**அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அமுதவல்லி அம்மன் அமுதலிங்கேஸ்வரர் கோவிலில் கார்த்திகை மாத சோமவாரதத்தை முன்னிட்டு அம்பாள் கோவிலில் உலா வந்து பொதுமக்களுக்கு அருள் பாலித்த காட்சி. நிகழ்ச்சியில் நாடார்கள் உறவின்முறை தலைவர் காமராஜர், கோவில் டிரஷ்டி ராஜரத்தினம் மற்றும் உறவின்முறை கோவில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

# டியூரோஃப்ளெக்ஸ் ‘வேவ் பிளஸ்’ அறிமுகப்படுத்தியுள்ளது

**சென்னை, டிச 07-**

இந்தியாவின் முன்னணி உறக்கத் தீர்வு வழங்குநரான டியூரோஃப்ளெக்ஸ், எப்போதும் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. இதை முன்னோக்கி எடுத்துச் சென்று இந்தியர்கள் மேம்படுத்தப்பட்ட உறக்கத்தை அனுபவிக்க உதவும் வகையில், நிறுவனம் ‘டியூரோஃப்ளெக்ஸ் வேவ் பிளஸ்ஸை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒருவரின் உறக்க அனுபவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சிறந்த செயல்பாட்டுத்திறன் கொண்ட, சரிசெய்யக்கூடிய ஸ்மார்ட் படுக்கையாகும். இப்புதிய ஆரோக்கியச் சலுகையின் மூலம், தரமான உறக்கத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்தும் நோக்கத்தில் டியூரோஃப்ளெக்ஸ் உறுதியாக உள்ளது.

இது குறித்து டியூரோஃப்ளெக்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி J மோகன்ராஜ் கூறுகையில், டியூரோஃப்ளெக்ஸ் வேவ் பிளஸ்ஸை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது உண்மையான உறக்க அனுபவத்தை வழங்குகிறது. ஒரு பிராண்டாக, இந்தியா நன்றாக தூங்க உதவும் உறக்க தொழில்நுட்பங்களை நாங்கள் தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். ஆராய்ச்சியின் அடிப்படையிலான மெத்தைகளை அறிமுகப்படுத்திய பிறகு, மக்களின் உறக்கம் மற்றும் ஆறுதல் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான நேரம் இது என்று முடிவு செய்தோம். எங்களின் சமீபத்திய சலுகையான டியூரோஃப்ளெக்ஸ் வேவ் பிளஸ் – சரிசெய்யக்கூடிய ஸ்மார்ட் பெட், நுகர்வோர் தங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு வெவ்வேறு நிலைகளிலும் கோணங்களிலும் சாய்ந்து, அவர்கள் படுக்கையில் படுக்க, தூங்குதல், உட்காருதல் அல்லது ஓய்வெடுக்க விரும்பும் எந்த நிலையில் அவர்களுக்கு வசதியையும் ஆதரவையும் வழங்கும் என்று கூறினார்.

# அழகிய வடிவமைப்பில் 5000 எம்.ஏ.எச். பேட்டரியுடன் விவோவின் புதிய ‘ஒய்02 ஸ்மார்ட்போன்’ அறிமுகம்

**சென்னை, டிச 07-**

உலகளாவிய சிறந்த ஸ்மார்ட்போன் பிராண்டாக திகழும் விவோ தனது ஒய் வரிசையில் புதிதாக ஒய் 02 ஸ்மார்ட்போனை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது.

இது அழகான வடிவமைப்பு மற்றும் மீடியா டெக் ஆக்டா-கோர் செயலியுடன் நீண்ட நேர பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் 5000 எம்.ஏ.எச். பேட்டரியுடன் ஒரு முழுமையான அனுபவத்தை நுகர்வோருக்கு வழங்கும்.8,999 ரூபாய் விலையில் ஆர்ச்சிட் ப்ளூ மற்றும் காஸ்மிக் கிரே ஆகிய 2 வண்ணங்களில் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து ஸ்டோர்களிலும், மின்னணு தளங்களிலும் கிடைக்கிறது.சிறந்த கேளிக்கை அனுபவம்மிகவும் மெல்லிய தோற்றத்துடன் 8.49 மி.மீ. தடிமனுடன் இது வெளிவந்திருக்கிறது.

இதன் காரணமாக இதை கைகளில் வழுக்காமல் கெட்டியாக பிடித்திருக்கலாம். இது 16.55 செ.மீ. புல் வியூ டிஸ்பிளே உடன் எச்டி+ ரிசலூஷனைக் கொண்டுள்ளது. மேலும் கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இதன் டிஸ்பிளே வடிவமைக்கப்பட்டுள்ளது.பன்டச் ஓஎஸ் 12 ஆபரேட்டிங் சிஸ்டம் மூலம் இயங்கும் இதில் 3 ஜி.பி. ரேம் மற்றும் 32ஜிபி ஸ்டோரேஜ் உள்ளது.

உங்கள் விருப்பத்திற்கேற்ப நீங்கள் 1 டி.பி. வரை ஸ்டோரேஜை நீட்டித்துக் கொள்ளலாம். பெரிய கேமரா – பெரிய பேட்டரிதனித்துவமிக்க பெரிய கேமராவைக் கொண்டுள்ள இதன் பின்புறம் 8எம்பி பிரதான கேமராவும் 5 எம்.பி. முன்புற கேமராவும் உள்ளது.



**திண்டுக்கல் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோவில் பிரகாரத்தில் கார்த்திகை தீபத்திரு நாளை முன்னிட்டு பக்தர்கள் விளக்கேற்றி வழிபட்டனர்.**

# வத்தலக்குண்டுவில் ஜெயலலிதா நினைவு தினம்: ஓ.பி.எஸ். அணியினர் உறுதிமொழி



**வத்தலகுண்டு, டிச. 07-**

மறைந்த முன்னாள் முதலமைச்சரும் அதிமுக முன்னாள்பொதுச்செயலாளருமான ஜெயலலிதாவின் 6ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி வத்தலக்குண்டு காளிம்மன் கோவில் முன்பாக உள்ள எம்ஜிஆர் திடலில் ஓ பி எஸ் அணியின் சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்தனர்.

பின்புஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அதிமுகவை வழுப்பெறச்செய்ய ஒவ்வருவரும் உறுதி எடுத்து பணி செய்ய வேண்டும் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்டச்செயலாளர் வைகைபாலன் தலைமை வகித்தார். வத்தலக்குண்டு அ தி மு க வடக்கு பகுதி ஒன்றிய கழகச்செயலாளர் முனியாண்டி விலாஸ் ரத்தினம், மாவட்ட மகளிர் அணி செயலாளர் புவனேஸ்வரி. திண்டுக்கல் தெற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் செந்தமிழ் பாண்டியன். வத்தலகுண்டு தெற்கு பகுதி ஒன்றிய செயலாளர் கோவிந்தன். வத்தலகுண்டு நகரச் செயலாளர் இளங்கோவன். பட்டிவீரன்பட்டி நகரச் செயலாளர் சதீஷ் குமார் . சேவகம் பட்டி நகர செயலாளர் பாண்டியன். துணைச்செயலாளர்செவத்தப்பெருமாள், நகரத்துணைச்செயலாளர் முத்துச்சாமி, நிலக்கோட்டை பொதுக்குழு உறுப்பினர்மணிப்பிள்ளை, .வத்தலக்குண்டுசெல்லத்துரை.முருகானந்தம். அதிமுக நிர்வாகிகள். தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.



**மதுரை மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். அருகில் துணை மேயர் நாகராஜன், துணை ஆணையாளர் முஜிபூர் ரகுமான், மண்டல தலைவர் பாண்டிசெல்வி ஆகியோர் உள்ளனர்.**

# நத்தத்தில் அம்பேத்கர் நினைவு நாள்

**நத்தம், டிச. 7**

திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் அம்பேத்கர் நினைவு நாள் கடைபிடிக்கப்பட்டது.

தொடர்ந்து மூன்றுலாந்தர் பகுதியில் உள்ள அவரது சிலைக்கு ஊர்வலமாக வந்து தொகுதி செயலாளர் தவச்செல்வம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் ஒன்றிய செயலாளர்கள் மயில்ராஜ், முத்துமாணிக்கம், தொகுதி துணை செயலாளர் தமிழ்முகம், நகர் செயலாளர் ராமர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



இதைப்போலவே பகுஜன்சமாஜ் கட்சி சார்பில் தொகுதி தலைவர் சுப்பிரமணி, தமிழ்ப் புலிகள் கட்சி சார்பில் தொகுதி செயலாளர் தங்கமுருகன் ஆகியோர் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.




**மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 6 - ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மேற்கு 6 - ம் பகுதி சார்பில் விளாங்குடி 20 வது வார்டு மற்றும் கூடல் நகர் 1,2 ஆகிய வார்டுகளில் ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு பகுதிசெயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன் தலைமையில் அ.தி.மு.க.நிர்வாகிகள் மார்க்கெட் மார்நாடு, கரிசல்பட்டி சேகர், மலைச்சாமி, நாராயணன், விஜயகுமார், ராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

## உதயநிதி பிறந்த தினத்தை முன்னிட்டு

# தென்கரை கைலாசநாதர் திருக்கோவிலில் அன்னதானம்



**தேனி டிச 7**

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே கைலாசநாதர் திருக்கோவிலில் தென்கரை பேரூர் கழகம் சார்பில் உதயநிதிஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னதானம் நடைபெற்றது.

பெரியகுளம் அருகே தென்கரை பேரூராட்சிக்குட்பட்ட பெரியநாயகி உடனுறை மலைமேல் கைலாசநாதர் திருக்கோவில் கார்த்திகை தீப திருநாள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருநாளை முன்னிட்டு தென்கரை பேரூர் கழகம் சார்பில் உதயநிதிஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

அன்னதானத்தை வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார், தென்கரை பேரூர் செயலாளர் பாலமுருகன், தென்கரை பேரூர் மன்ற தலைவர் நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், பெரியகுளம் நகர்மன்ற தலைவர் சுமிதாசிவக்குமார், கவுன்சிலர் தேவராஜ் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

**மரம் மனிதனின் உரம்**

